# தேசிய கல்வி நிறுவகம்
# மஹரகம

## ஆலோசனை வழங்கலில் டிப்ளோமா பாடநெறி

## SLQF Level - 03

## Diploma in Counselling 2026/2027

தேசிய கல்வி நிறுவகத்தின் வழிகாட்டல் மற்றும் ஆலோசனைப் பிரிவினால் முன்னெடுக்கப்படும் மேற்படி பாடநெறிக்கான விண்ணப்பப்படிவம் கோரப்பட்டுள்ளது.

01. பாடநெறியின் தன்மை:

- ஆலோசனை வழங்கலில் டிப்ளோமா பாடநெறியானது 31 திறமை மட்டங்களை உள்ளடக்கிய ஒரு வருட கால, வார இறுதி நாட்களில் இடம்பெறும் பகுதிநேரக் கற்கை நெறியாகும்.
- நேரடி விரிவுரை (40%) மற்றும் நிகழ்நிலை (60%) வகுப்புகள் ஆகிய கலப்பு முறைகளில் நடைபெறவுள்ள மேற்படி பாடநெறியானது, வழிகாட்டல் மற்றும் ஆலோசனை தொடர்பான பிரயோகப் பயிற்சியையும் உள்ளடக்கியுள்ளது.
- பாடநெறி சிங்களம்/ தமிழ் ஆகிய மொழிகளில் இடம்பெறும்.

02. விண்ணப்பத் தகைமை:

- அரச, தனியார் மற்றும் அரச அனுசரணையுடன் இயங்கும் பாடசாலை ஆசிரியர்கள்
- அரச, தனியார் துறையில் ஆலோசனை விடயப்பரப்பில் சேவையில் ஈடுபட்டுள்ளவர் அல்லது ஆர்வம் உடையவர் (சேவைச்சான்றிதழ் சமர்ப்பிக்க வேண்டும்.)
- கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, முன்பள்ளி ஆசிரியர்களாகச் சேவை புரிவோர் இக்கற்கை நெறிக்காக விண்ணப்பிக்கலாம் (சேவைச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).
- 2026.04.10 ஆம் திகதியன்று 55 வயதுக்கு மேற்படாதோர்.

03. பாடநெறிக்கான தெரிவுமுறை:

நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்படும்.

04. கட்டணம்:

| | |
|---|---|
| விண்ணப்பக் கட்டணம் | : 500 ரூபாய் |
| பதிவுக் கட்டணம் | : 1000 ரூபாய் |
| பாடநெறிக் கட்டணம் | : 40,000 ரூபாய் (சமனான இரு தொகைகளாக இரண்டு தவணைகளில் செலுத்த முடியும்) |

05. பாடநெறி நடைபெறும் இடம்: தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

06. விண்ணப்பிக்கும் முறை:

- தேசிய கல்வி நிறுவகத்தின் இணையத்தளத்தினுள் பிரவேசித்து, பரீட்சைத் திணைக்களத்தின் வலைப்பக்கத்தில் விண்ணப்படிவம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும். https://www.exams.nie.lk/intakes/new
- விண்ணப்பிக்கும் போது பின்வரும் படிமுறைகளைக் கடைப் பிடிக்கவும்.
    - https://www.exams.nie.lk/intakes/new வலைப்பக்கத்தினுள் பிரவேசித்து (sign up ) உரிய தகவல்களைப் பூரணப்படுத்துக. அங்கு உமக்கு வழங்கப்படும் பயனாளி இலக்கத்தைப் (user ID) பதிவிடுங்கள். மேலதிகத் தொடர்புகளுக்காக உங்களது கடவுச் சொல்லைக் (Password) குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.
    - வலைத்தளத்தின் வலப்பக்கத்தில் மேல் உள்ள இரு கூண்டுகளில் உங்களது பயனாளர் இலக்கம் மற்றும் கடவுச் சொல்லைப் பதிவிட்டு உள்நுழைக (Log in).

teachmore.lk

- உங்களின் சுய விபரங்களை (User Profile ) பூர்த்தி செய்யுங்கள்.
- அடுத்து புதிய தகவல் பக்கத்தினுள் (New Enrollment) நுழையுங்கள்.
- அடுத்து குறித்த பாடநெறிக்குரிய விண்ணப்பப் பகுதிக்குள் (My Application) நுழையுங்கள்.
- விண்ணப்பப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.
- இலக்கம் 6 இல் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிக்கான உரிய மொழி மூலத்தை தெரிவு செய்யுங்கள்.
- படிமுறை 2 இனுள் (STEP 2 Payment) பிரவேசியுங்கள். இங்கு நீங்கள் இலங்கை வங்கிக் கிளை ஒன்றில், தரப்பட்டுள்ள கணக்கு இலக்கத்துக்கு 500/= ரூபாவை விண்ணப்பக் கட்டணமாகச் செலுத்தியதுக்கான ஆதார எண்ணைப் பதிவிடுங்கள். (Payment Reference Number)

  \- கட்டணம் செலுத்தியதற்கான பற்றுச் சீட்டினை ஊடுகதிர் (Scan) செய்து, அதன் திகதி மற்றும் பற்றுச்சீட்டு இலக்கம் (Transaction Reference Number) ஆகியவற்றை உரிய இடத்தில் பதிவிடுங்கள்.
- பூர்த்தி செய்த விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றினை வைத்துக் கொள்ளுங்கள்.
- விண்ணப்பப்பத்திரத்தை முன்வைத்தல் தொடர்பான தொழிநுட்பப் பிரச்சினைகள் தொடர்பில் தொலைபேசி 0117601776 (நீட்டிப்பு 777) இலக்கத்தினைத் தொடர்பு கொள்ளவும்.

  \- இது தொடர்பான மேலதிகத் தகவல்களுக்காக 0117601752 என்ற தொலைபேசி இலக்கத்தை வாரநாட்களில் (மு.ப. 9.00 தொடக்கம் பி.ப. 4.00 மணி வரை) அழையுங்கள்.

07. விண்ணப்ப இறுதித் திகதி 2026/04/10.

பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்

இந்த QR குறியீட்டை Scan செய்து, விண்ணப்பித்தலுக்கான வழிகாட்டல்களைப் பெறலாம்.

teachmore.lk